(இ) கூவம் ஆற்றிலிருந்து இத்திட்டத்திற்கு நீர் எடுத்துக்கொள்ளப் படும். சென்னை மாநகரின் வடக்குப் பகுதிக்கு ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் ஆயச்சேரி கிராமத்திற்கருகில் இத்திட்டத்திற்கான இடம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் படுகையில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ள வடிப்புப் பணிகள் **(Infiltration works)** மூலம் 300 மில்லி மீட்டர் குறுக்களவும் 8,504 மீட்டர் நீளமும் உள்ள பெரிய குழாய் மூலமாக, பூவிருந்தவல்லி நகரில் உயர் மட்டத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ள நீர்த் தேக்கத்திற்கு நீரைக் கொண்டு வந்து அங்கிருந்து தேவையான நீர் எடுத்துக் கொள்ளப்படும். நீர் வழங்கும் காரியங்களுக்காக பூவிருந்தவல்லி நகரம் இரு மண்டலங்களாகப் பிரிக்கப்படும்; ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனி குடிநீர்த் தேக்கம் ஒன்றும், நீர் வழங்கு அமைப்பும் இருக்கும்.

பூவிருந்தவல்லி பேரூராட்சிக்கென நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 20 காலன் அல்லது 90 லிட்டர் அளவுக்கு நீர் வழங்கப்படும்; வழியிலுள்ள கிராம மக்களுக்கு, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 காலன் அல்லது 45 லிட்டர் அளவுக்கு நீர் வழங்கப்படும். இத்திட்டம் குறித்த பணிகள் நடந்தேறி வருகின்றன.

Hospital Equipments Repairing Centre.

* 248 *Q.*—THIRU L. BALARAMAN (ON BEHALF OF THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Health be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 58 on 25th June 1971:—

(*a*) whether there is any proposal to have a repairing centre for repairing hospital equipments such as Electro-Cardiogram, X-ray equipment, etc., under the control of the Health Department itself; and

(*b*) if so, the details thereof?

மருத்துவமனைச் சாதனங்களைப் பழுதுபார்க்கும் நிலையம்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எலெக்ட்ரோ-கார்டியோகிராம், எக்ஸ்-கதிர் சாதனங்கள் போன்ற மருத்துவமனைச் சாதனங்களைப் பழுது பார்ப்பதற்காக, பழுது பார்க்கும் நிலையம் ஒன்றை மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

1974 மார்ச் 29]

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

Co-operative Fruit Processing Industry in North Arcot District

*249.Q— THIRU L.BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) the amount collected as shares in the Co-operative Fruit Processing Industry in North Arcot District;

(*b*) the capital investment in this Industry;

(*c*) whether this Industry is remunerative; and

(*d*) the reasons for non-distribution of Share Certificates, if any?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலைக்காக வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை எவ்வளவு?

(இ) இதற்கான மூலதனம் எவ்வளவு?

(உ) தற்போது இத்தொழிற்சாலை லாபகரமாக நடக்கின்றதா?

(எ) பங்குச் சான்று ஏதும் வழங்காமல் இருப்பின் அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) பங்குத் தொகைக்காக அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,31,797. பங்குத் தொகைக்காக அரசாங்கம் அளித்துள்ள தொகை ரூ. 5 இலட்சம்.

(இ) தொழிலகத்தை நிறுவ மொத்தம் செலவான தொகை ரூ. 22 இலட்சம்.

(உ) இல்லை.